


நாடாளுமன்றத்தில் நடந்த தாக்குதல் எழுப்பிய அதிர்ச்சி அலைகள் தேசம் முழுதும் பரவி, திகிலை உண்டாக்கியிருந்த சமயம். சரியாக இருபத்து நான்கு மணிநேரம் கழித்து, நடந்த சம்பவத்துக்கு லஷ்கர் இ தொய்பாவும், ஜெய்ஷ் ஏ முஹம்மதுவும் காரணம் என்று அறிவிக்கப்பட்டது. இரண்டு இயக்கங்களும் கூட்டணி அமைத்து நிகழ்த்திய காரியம் என்று சொன்னார்கள்.

உள்துறை அமைச்சராக அப்போது இருந்த எல்.கே. அத்வானி ஓர் அறிக்கை வெளியிட்டார். 'நடந்த சம்பவத்துக்கு அண்டை தேசம் காரணம். சில க்ளூக்கள் கிடைத்திருக்கின்றன. சில தீவிரவாத இயக்கங்களின் துணையுடன் செய்திருக்கிறார்கள்.'

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத தேசம் என்று, இதனைக் காட்டிலும் வெளிப்படையாக அத்தனை பெரிய பதவியில் இருந்தவர் சொல்லியிருக்க முடியாது. ஆனால் அவசர அவசரமாக ஒரு தேசத்தையே ஏன் அவர் குற்றவாளியாகச் சொல்லவேண்டும் என்கிற கேள்வி எழுந்தது. கொந்தளித்துக் கொண்டிருந்த இந்தியர்களின் உணர்வுக்கு அது ஒரு சிறு ஆறுதலாக இருக்கலாம் என்று அவர் கருதியிருக்கலாம். அத்தோடு நிறுத்தாமல் இந்தியாவுக்கான பாகிஸ்தான் ஹை கமிஷனர் அஷ்ரஃப் ஜஹாங்கீர் காஜியை (Ashraf Jehangir Qazi) அழைத்து, லஷ்கர், ஜெய்ஷ் இரண்டு அமைப்புகளையும் பாகிஸ்தான் தடை செய்ய வேண்டும்; அவர்களுக்கு நிதியுதவி செய்வது நிறுத்தப்படவேண்டும்; அவர்களது சொத்துகள் முடக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையைத் தெரியப்படுத்தினார்கள்.

ஆப்கன் யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயம் அது. ஒசாமா பின் லேடனும், ஒற்றைக்கண் முல்லா முஹம்மது ஓமரும் அமெரிக்கக் கூட்டணிப் படையினருக்குத் தண்ணி காட்டிக் கொண்டிருந்தார்கள். 'விரிச்சுவல் ரியாலிடி' மாதிரி அவர்கள் இருக்கிறார்கள், இல்லை என்று தினமொரு தகவல் மாறி மாறி வந்து கொண்டிருந்தது. அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவு தெரிவித்து களத்தில் நின்றிருந்த பாகிஸ்தானுக்கு, இந்தியாவின் இந்த பகிரங்கக் குற்றச்சாட்டு மிகுந்த தர்ம சங்கடத்தை விளைவித்தது.

ஒரு பக்கம் தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் பங்கெடுப்பு. மறுபக்கம் லஷ்கரை அனுப்பி இந்திய நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தச் சொன்னதாகக் குற்றச்சாட்டு. மானம் சாட்டிலைட்டில் ஏறாதோ?

என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். அதிக அவகாசமில்லை. பாகிஸ்தான் ராணுவத்தின் செய்தித் தொடர்பாளராக அப்போது இருந்த மேஜர் ஜெனரல் ரஷித் குரேஷி (Rashid Qureshi) மூலம் ஓர் அறிக்கை வெளியிட்டது பாகிஸ்தான் அரசு.

'இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்தை,

அது நிகழ்ந்தவுடன் பாகிஸ்தான் கண்டித்தது. ஆனால், இப்போது தெரியவருவது என்னவென்றால், இந்திய ராணுவமே செட்டப் செய்து நிகழ்த்திய நாடகம்தான் அது! காஷ்மீரில் நடந்துவரும் சுதந்திரப் போராட்டத்துக்கு அவப்பெயர் கொண்டு சேர்ப்பதற்காகவே திட்டமிட்டு இதனைச் செய்திருக்கிறார்கள்!'

அவ்வளவுதான். அமைதிப் பேச்சுவார்த்தை, அவரைக்காய், பருப்புக்கூட்டு என்று அதுவரை என்னவாவது பேசிக்கொண்டிருந்ததெல்லாம் அத்தோடு தாற்காலிகமாக மூட்டை கட்டிப் பரணில் போடப்பட்டது. டிசம்பர் 20-ம் தேதி இந்தியா ஒரு காரியம் செய்தது. ராணுவத்தின் மிகப்பெரிய படைப்பிரிவுகளைத் திரட்டி காஷ்மீரிலும் பஞ்சாப் எல்லையிலும் கொண்டு குவித்தது. பாதுகாப்பு நடவடிக்கை என்று சொல்லப்பட்டது.

மிகப்பெரிய என்றால், உண்மையிலேயே மிகப் பெரிய. 1971 - இந்தியா, பாகிஸ்தான் யுத்த சமயத்தில் குவிக்கப்பட்ட படைகளுக்குச் சமம் அது. அதற்குப் பின் வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் அத்தனை பெரிய ராணுவப் படை பாகிஸ்தான் எல்லைப் பக்கம் நிறுத்தப்பட்டதில்லை. கார்கில் யுத்தத்தின்போதுகூட!

இதுவும் சர்வதேச அரங்கில் மாபெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. ஒரு பக்கம் தீவிரவாதத்துக்கு எதிரான அமெரிக்கக் கூட்டணி கோஷ்டியின் யுத்தம். மறுபுறம் இந்திய - பாகிஸ்தான் போர் மேகம் அல்லது போர் மூடுபனி. எல்லோருமே பதறினார்கள். ஜார்ஜ் புஷ் கூடக் கவலையோ என்னமோ தெரிவித்துப் பேசினார்.

மறுபுறம் பேய் வேகத்தில் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்கும் பணிகள் நடந்து கொண்டிருந்தன. நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய ஐந்து பேரும் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்ட நிலையில், பின்னணிப் பரமாத்மாக்கள்தான் டார்கெட். லஷ்கரும் ஜெய்ஷும் இணைந்து செய்த காரியம் என்பது தெரியும். ஆனால் ஸ்கிரிப்ட் எழுதி இயக்கிய பிரதிநிதி யார்? அல்லது பிரதிநிதிகள் யார் யார்?

தில்லியிலும் காஷ்மீரிலும் கடுமையான தேடுதல் வேட்டையும் விசாரணையும் முடுக்கிவிடப்பட்டன. இறந்த ஐந்து தீவிரவாதிகளை விதவிதமாக போட்டோ பிடித்து, பழைய கேடி லிஸ்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். மறுபுறம், இறந்தவர்கள் உள்பட மொத்தம் பன்னிரண்டு பேர் தாக்குதல் திட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று ஒரு பட்டியலும் வெளியிட்டார்கள்.

ஜெய்ஷ் ஏ முஹம்மதுவைச் சேர்ந்த மௌலானா மசூத் அஸார் (கந்தஹார் விமானக் கடத்தல் புகழ்!), காஸி பாபா (இறந்தவர்களுள் ஒருவன்), பாகிஸ்தானைச் சேர்ந்த தாரிக் அஹமது, காஷ்மீரிகளான எஸ்.ஏ.ஆர். கீலானி, ஷவுகத் ஹுசைன் குரு, முஹம்மது அஃப்ஸல், ஷவுகத்தின் மனைவியான அஃப்ஸான் குரு ஆகியோரைத் தவிர இன்னும் அடையாளம் தெரியாத ஐந்து பேரும் சம்பந்தப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்கள். அவர்கள்தான் லஷ்கரைச் சேர்ந்தவர்கள். பெயரற்றவர்கள்!

மேற்படி பெயர் தெரிந்த பட்டியலில் மௌலானா மசூத் அஸாரைப் பிடிப்பது என்பது கஷ்ட காரியம். அவர் பாகிஸ்தானில் இருப்பவர். காஸி பாபா சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ போய்ச் சேர்ந்து இரண்டு தினங்கள் ஆகியிருந்தன. எனவே கீலானி, ஷவுகத் ஹுசைன் குரு, முஹம்மது அஃப்ஸல், அஃப்ஸான் குரு ஆகிய காஷ்மீரிகளைக் கைது செய்தது காவல் துறை.

கீலானி, தில்லியில் ஜாகிர் உசேன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். மிகவும் கௌரவமான நபராகக் கருதப்பட்டவர். அவரது கைது பலராலும் நம்ப முடியாததாக இருந்தது. இவரா, இவரா என்று மாணவர்கள் மாய்ந்து போனார்கள். கீலானியின் நண்பர்கள் அனைவரும் அதிர்ச்சியில் வாயடைத்தார்கள். கீலானி தீவிரவாதியா? ஜெய்ஷ் ஏ முஹம்மது

அல்லது லஷ்கருடன் தொடர்பு கொண்டவரா? உண்மையா? அல்லது ஜோடிப்பா?

விவாதங்கள் சூடுபிடித்தன. அவர் போடோ (POTO) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். தீவிரவாதத் தடுப்புப் பிரிவு. தில்லி போலீஸுக்கு கீலானிமீது சந்தேகம் எழக் காரணமாக இருந்தது ஒரு தொலைபேசி அழைப்பு. தில்லியில் இருந்த கீலானி, காஷ்மீரில் தன்னுடைய உறவினரான ஷவுகத்துடனும் அவரது மனைவி அஃப்ஸனுடனும் காஷ்மீரி மொழியில் சில நிமிடங்கள் பேசியதை போலீஸ் ரகசியமாகப் பதிவு செய்திருந்தது. போட்டு, கேட்டுப் பார்த்ததில் நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பான வழக்குக்கு அது ஒரு வலுவான சாட்சியமாக இருப்பதாகக் கருதி, அவரைக் கைது செய்திருந்தார்கள். கீலானி திஹார் சிறையில் அடைக்கப்பட்டார். ஷவுகத்தும் அஃப்ஸனும் கூட. பின்னால் வருஷக்கணக்கில் வழக்கு நடந்து, கீலானி மீது துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறி, என்னென்னவோ கலாட்டாக்கள் நடந்து முடிந்து ஒருவழியாக அவர்கள் நிரபராதிகள் என்று உச்சநீதிமன்றம் விடுவித்ததெல்லாம் இங்கே தேவையற்றவை.

நான்காவது நபர் முஹம்மது அஃப்ஸல் குரு. இன்றைக்கு வரை செய்தியில் இருப்பவர். மேற்படி வழக்கில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, ஜனாதிபதிக்குக் கருணை மனு எழுதிக் காத்திருப்பவர்.

அஃப்ஸல் குருவின் வாக்குமூலங்கள், இந்தக் குறிப்பிட்ட வழக்குக்கு மட்டுமல்லாமல் காஷ்மீர் இயக்கங்கள், காஷ்மீர் காவல் துறை, சிறப்பு அதிரடிப்படை, காஷ்மீர் மக்களின் நிலைமை ஆகிய பல்வேறு அம்சங்கள் குறித்த பல வெளிவராத விவரங்கள் வெளிவரக் காரணமான மிக முக்கிய ஆவணம்.

காஷ்மீரில் நீங்கள் எந்த ஓர் இளைஞரையும் ஏதோ ஓர் இயக்கத்துடன் சம்பந்தப்படுத்திக் கைது செய்துவிட முடியும். இப்போது இருக்கும் - இயங்கும் இயக்கமோ, எப்போதோ செத்தொழிந்த இயக்கமோ. நேரடி உறுப்பினராக இல்லாது போனாலும் குறைந்தபட்சம் அனுதாபியாக இருப்பார்கள். நிதியளித்தவர்களாக இருப்பார்கள். போஸ்டர் ஒட்டியவர்களாக இருப்பார்கள். கோஷம் போட்டவர்களாக இருப்பார்கள். சிலர் துப்பாக்கியைத் தூக்கிப் பார்த்துவிட்டு, முடியாமல் கீழே போட்டவர்களாக. கொஞ்சநாள் போராளியாக இருந்துவிட்டு, திருந்தி மீண்டவர்களாக.

அஃப்ஸல் குருவின் வாழ்வும் வாக்குமூலமும் நமக்குத் தெரிவிக்கும் செய்தி இதுதான். ஒரு விஷயம். லஷ்கர் இ தொய்பா குறித்த இந்தப் பகுதியில் அஃப்ஸல் குருவின் கதை சற்றே அந்நியமாகப் படலாம். ஆனால் லஷ்கர் போன்ற இயக்கங்களின் இருப்பும் இயக்கமும் காஷ்மீரில் எவ்வாறு சாத்தியமாகிறது என்பது புரிய வேண்டுமானால், இதைத் தெரிந்து கொண்டுதான் ஆகவேண்டும்.

முஹம்மது அஃப்ஸல் குரு படிக்கிற காலத்தில் ஒரு சமர்த்து மாணவர். எம்.பி.பி.எஸ். படித்துக்கொண்டிருந்தவர். வருடம் 1987.

அந்த வருஷம் காஷ்மீரில் ஒரு பொதுத்தேர்தல் நடந்தது. ஃபரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி, இந்திரா காங்கிரஸுடன் கூட்டணி வைத்துத் தேர்தலில் இறங்கியது. இந்தக் கூட்டணி காஷ்மீர் மக்களுக்குப் பிடிக்கவில்லை. சுத்தமாகப் பிடிக்கவில்லை. மானங்கெட்ட அரசியல் என்று வருணித்தார்கள். ஃபரூக் அப்துல்லாவைத் தேர்தலில் தோற்கடித்தே தீரவேண்டும் என்று முடிவு செய்து, காஷ்மீரின் மெஜாரிட்டி மக்களான முஸ்லிம்கள், 'ஐக்கிய முஸ்லிம் முன்னணி' என்கிற பெயரில் ஒரு புதிய கட்சியைக் களத்தில் இறக்கினர்.

இது ஃபரூக்குக்கு அடிவயிற்றில் உப்பு, புளி, மிளகாய் எல்லாவற்றையும் சேர்த்து அரைத்துக் கரைத்தது. தேர்தலில் தே.மா.க. - காங்கிரஸ் கூட்டணி தோல்வியடைந்தால் மாபெரும் அவமானம். அதைவிட புத்தம்புதிய ஐக்கிய முஸ்லிம் முன்னணி வெற்றி பெறுமானால் படுகுழி அவமானம்.

ஆனால் நிலைமை அப்படித்தான் இருந்தது. தொண்ணூற்றொன்பது சதவிகித காஷ்மீர் இளம் வாக்காளர்கள் ஐ.மு.மு.வைத்தான் ஆதரித்தார்கள். படு உக்கிரமாகப் பிரசாரம் நடைபெற்றது.

எனவே வேறு வழியில்லாமல் ஃபரூக் - காங்கிரஸ் கூட்டணி தேர்தல் தில்லுமுல்லுகளில் இறங்கியது. வோட்டுச் சாவடிகள் கைப்பற்றப்பட்டன. கள்ள வோட்டுத் திருவிழா நடத்தப்பட்டது. எல்லா இடங்களிலும் அவர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனால் நம்பிக்கையுடன் தேர்தலில் இறங்கிய காஷ்மீர் இளைஞர்கள் முற்றிலுமாகத் தேர்தல் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து போனார்கள். காஷ்மீர் அரசியல்வாதிகளால் தங்களுக்கு விடிவே கிடையாது என்று அவர்கள் முடிவுக்கு வந்த நேரத்தை பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. மிகத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டது.

உடனடியாக காஷ்மீர் இளைஞர்களை அரவணைக்க முன்வந்தது. மாநிலமெங்கும் சிறு சிறு ஆயுதக் குழுக்கள் உருவாகத் தொடங்கின. அம்மானுல்லாகானின் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியில் (JKLF) நூற்றுக்கணக்கான காஷ்மீர் முஸ்லிம் இளைஞர்கள் புதிதாக உறுப்பினர்களானார்கள். மூலைக்கொரு இயக்கம். வேளைக்கொரு பயங்கரவாதம்.

இதே காலகட்டத்தில்தான் லஷ்கர் போன்ற பாகிஸ்தான் இயக்கங்கள் தங்கள் தலைமையகத்தை லாகூரிலிருந்து முஸஃபராபாத்துக்கு மாற்றிக்கொண்டு காஷ்மீர் எல்லையில் வந்து கூடாரமிடத் தொடங்கின.

ஐ.எஸ்.ஐக்கு சௌகரியமாகப் போய்விட்டது. வருஷ பட்ஜெட்டில் கணிசமான தொகையை இயக்கங்களுக்குச் செலவிடத் தொடங்கினார்கள். ஆயுதங்களாக. வெடிகுண்டுகளாக. வாகனங்களாக. உணவுப் பொருள்களாக. சமயத்தில் மாதச் சம்பளமாகக் கூட!

காஷ்மீரின் விடுதலைக்காகப் போராடும் அத்தனை காஷ்மீர் இயக்கங்களுக்கும் முஸஃபராபாத்தில் பயிற்சியளிக்கப்படும் என்கிற தகவலை, பிட் நோட்டீஸ் அடிக்காத குறையாக காஷ்மீர் முழுதும் பரப்பினார்கள். ஜே.கே.எல்.எஃப். உள்ளிட்ட அத்தனை காஷ்மீர் இயக்கங்களும் முஸஃபராபாத்துக்குத் தம் வீரர்களைப் பயிற்சிக்காக அனுப்பத் தொடங்கின.

இந்த நடவடிக்கையின் ஆரம்பக் காலத்தில்

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை சற்றே கோட்டை விட்டது என்றுதான் சொல்லவேண்டும். எல்லை தாண்டிச் செல்லும் இளைஞர்களை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. பனிச் சிகரங்களில், படு பாதாளக் காடுகளில் இரவெல்லாம் பகலெல்லாம் பதுங்கிப் பதுங்கிச் சென்று பாகிஸ்தானில் பயிற்சி பெற ஆரம்பித்தார்கள் காஷ்மீர் இளைஞர்கள்.

அப்படிச் சென்ற ஜே.கே.எல்.எஃப் உறுப்பினர்களுள் ஒருவர்தான் முஹம்மது அஃப்ஸல் குரு.